பத்திரிக்கைச் செய்தி

செ.வெ.எண்: 9 நாள்: 07.08.2010

**தேசிய கண்தான இருவார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கோ.சு.இராமதாசு அவர்கள் தலைமையேற்று துவக்கி வைத்தார்.**

***

புதுக்கோட்டை மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட தேசிய கண்தான இருவார விழா விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆ.சுகந்தி இ.ஆ.ப., அவர்களின் அறிவுரையின் பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கோ.சு.இராமதாசு அவர்கள் புதுக்கோட்டை பொது வளாகத்திலிருந்து கொடியசைத்து துவக்கிவைத்தார். கண்தான விழிப்புணர்வு பேரணியில் குலபதி பாலையா பள்ளி, சந்தைப்பேட்டை மகளிர் உயர்நிலைப் பள்ளி,ஸ்ரீபிரகதம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, தூய இருதய மகளிர் மேல் நிலைப் பள்ளி, திருக்கோகர்ணம் அரசு மேல்நிலைப் பள்ளி, சமஸ்கிருத வித்யாலாயா பள்ளி, பெண்கள் மகளிர் கலைக் கல்லூரி, மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி, கீரை தமிழ்ச் செல்வன் செவிலியர் கல்லூரி, ஜே.ஜே.செவிலியர் கல்லூரி ஆகிய பள்ளி மற்றும் கல்லூரிகளிலிருந்து 700 மேற்பட்ட மாணவ-மாணவிகள் கண்தான விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டனர்.

“கொண்டு போவது ஒன்றுமில்லை தொண்டு செய்வோம் கண்தானம், இறந்தவுடன் உலகைக் காண கண்தானம் செய்வோம், காப்போம், காப்போம்! கண் பார்வை காப்போம்! ஒருவர் கண்தானம் செய்தால் இருவர் கண் பார்வை பெறுவர், தானத்தில் சிறந்தது கண்தானம், கண்களுக்கு கிடையாது மரணம், இருக்கும் வரை இரத்த தானம




புதுக்கோட்டையில் நடைபெற்ற தேசிய கண்தான இருவாரவிழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கோ.சு.இராமதாசு அவர்கள் கண்தான விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து கருத்தரங்கில் கலந்து கொண்டு தனது கண்களை தானம் செய்து அதற்கான உறுதிமொழி கடிதத்தை பார்வை இழப்பு தடுப்புச் சங்கத்தின் உதவி கண் மருத்துவர் திருமதி மரு.கே. பொன்மலரிடம் வழங்கினார். அருகில் இணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள் மரு.எஸ்.எழிலரசன், துணை இயக்குநர் (மருத்துவம்) கே. இராமநாதன், கோட்டாட்சியர் .ஜி.கங்காதரன் மற்றும் பலர் உள்ளனர்

இறந்தபின் கண் தானம், மண்ணுக்குப்போவதை மனிதனுக்கு கொடுப்போம்-கண் தானம், இறந்தும் இறவா புகழ்பெற கண்தானம் செய்வோம், விழிக்கொடை வாழ்வின் உயிர் கொடை, மண் தின்னும் கண்களை மனிதனுக்கு கொடு, ஒரு முடிவில் தான் மற்றொரு ஆரம்பம், வயிற்றுக்கு அன்னதானம் பார்வைக்கு கண் தானம், ஒளிகாண விழி தருவோம் விழிகாணும் வகை செய்வோம், இருந் கொண்ட இமைகளுக்கு ஒளி கொடுப்போம் வாரீர்! விழி தந்து வாழ்விற்கு ஒளி தருவோம்.” என்கிற வாசகங்கள் அடங்கிய விளம்பர பதாதைகளை கையில் ஏந்திய வண்ணமும் வாசகங்னளை உரக்க குரலில் கூறிக்கொண்டும் மாணவ மாணவியர்கள் சென்றனர்.

அதனை தொடர்ந்து, தேசிய கண்தான இருவார விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை நகர் மன்ற வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆ.சுகந்தி இ.ஆ.ப., அவர்களின் அறிவுரையின் பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கோ.சு.இராமதாசு அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்து தலைமையுரையாற்றி பேசும்போது, “புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த வருடம் 700 கண்தானம் செய்தவர்களின் படிவம் பெறப்பட்டுள்ளது. கடந்த வருடமும் இதுவரை 27 நபர்களிடம் இருந்து கண்தானம் பெறப்பட்டுள்ளது. இந்த வருடம் 6 நபர்களிடம் கண்கள் தானம் பெறப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளாக நமது மாவட்டம் கண்புரை அறுவைச் சிகிச்சை அதிக அளவிற்கு செய்து முதலிடம் வகித்துள்ளது.

ஒவ்வொர ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமாக அனைத்து பள்ளிகளிலும் கண்பார்வை குறைபாடுள்ள மாவணவர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக கண் கண்ணாடிகள் வழங்கப்படுகிறது. கிராமப்புற கண்புரை நோயாளிகளை கண்டறிந்து அரசு தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களுக்கு கண்புரை சிகிச்சை செய்து இலவசமாக IOL(உள்வழி லென்ஸ்) பொருத்தப்படுகிறது. ஆகஸ்ட் மாதம் வரை சுமார் 1069 நபர்களுக்கு IOL பொருத்தி அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

கண்தானம் என்பது அனைத்து தானங்களிலும் சிறந்த தானமாகும். பிறந்த ஒவ்வொரும் மனிதனுக்கும் கண்கள் நல்ல நிலையில் இருக்கும்போது பார்த்து மகிழ்ச்சியடைகின்றோம். உலகத்திலுள்ள இயற்கை அழகை பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் கண்கள் முக்கிய உறுப்புகளாகின்றன. கண்கள் இல்லையென்று சொன்னால் இருள் சூழ்ந்தது போலாகிவிடும். அவர்கள் எதையும் பார்த்து ரசித்து இன்புற்று வாழ முடியாத நிலை ஏற்படுகிறது. இருள் சூழ்ந்த நிலையில் ஒளியை ஏற்றும் போது எப்படி அவ்விருளில் வெளிச்சம் ஏற்படுகின்றதோ, அவ்வாறு பார்வை இழந்தவர்களுக்கு நம்முடைய கண்களை தானம் மூலம் வழங்குவதினால் இருள் சூழ்ந்த அவர்கள் வாழ்வில் வெளிச்சம் கிடைக்கின்றது. இதனால் அவர்கள் வெளியுலகத்தையும், இயற்கையையும் பாாத்து, ரசித்து மகிழ்ச்சியுடன் வாழ கண்தானம் சிறந்த தானமாக உள்ளது. எனவே, சமதர்மத்துடன் வாழ நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

இளைஞர் முதல் பெரியவர்கள் வரை எந்த வயதிலும் கண்தானம் செய்யலாம். கண்தானத்தில் கண்களின் கருவிழி மட்டுமே பயன்படுத்தப்படுவதால் எத்தகைய மனிதர்களும், நோயளிகளும் கண்களை தானம் செய்யலாம். எனவே, விருப்பமுள்ள அனைவரும் இன்றே, இங்கேயே கண்தான படிவம் பதிவு செய்யாலம். இறந்த பின்பு 6 மணி நேரத்திற்குள் கண் தானம் செய்யப்பட வேண்டும். எனவே, கண்தானம் செய்த இறந்தவர்களின் உறவினர்கள் கால தாமதமின்றி அருகில் உள்ள கண்தான வங்கிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இறந்தவர்களின் கண்களை மூடிவிட்டு இமைகள் மீது ஈராமான பஞ்சை வைக்க வேண்டும். இறந்தவர் உடல் இருக்கும் அறையில் மின் விசிறி நிறுத்தப்பட வேண்டும். தானமாக பெறப்பட்ட ஒருவரது கண்கள் பத்திரப்படுத்தி இருவர் கண்களுக்குப் பொருத்தப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் அரசு தலைமை மருத்துவமனையில் கண்தான இருவரா விழா கொண்டாடப்படுகிறது. மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது” என்றார். பின்னர்

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தனது கண்களை தானமாக வழங்குவதாக அறிவித்ததுடன் அதற்குரிய ஒப்பந்த படிவத்தினையும் பூர்த்தி செய்து வழங்கினார். அவரது செயலைப் பாராட்டி அவருக்கு பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது. மேலும், சத்தினபட்டியைச் சேர்ந்த திரு.வி. கோபால்(வயது 70) அவர்களும் இக்கருத்தரங்கில் கண்தானத்திற்கான ஒப்பந்தப் படிவத்தை பூர்த்தி செய்து வழங்கினார்.

கண்தானம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தேசிய செவிலியர் கல்லூரி மாணவிகளும் மாவட்ட பார்வையற்றோர் பள்ளி மாணவ மாணவியரும் கலைநிகழ்ச்சிகள் நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர், (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எழிலரன் முன்னிலை வகித்தார். கண்ணப்ப நாயனார் கண்தான வழிப்புணர்வு மையம் திரு.கோவிந்தராஜன், திட்ட விளக்கவுரையும், துணை இயக்குநர்(மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) புதுக்கோட்டை மரு.கே.ராமநாதன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) புதுக்கோட்டை மரு.பவானி உமாதேவி, கண் மருத்துவர் மரு.ஆர்.சுப்புராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிற்புரையாற்றினார்கள்.

தலைவர் (லையன்ஸ் கிளப் ஆப் விக்டரி)திரு.ஜோனார்த்தன் பிரீத், தலைவர் (புதுக்கோட்டை சென்டரல் ரோட்டரி கிளப்) திரு.எம்.பார்த்திபன், தலைவர் புதுக்கோட்டை இலக்கியப் பேரவை திரு. மு. முத்துசீனிவாசன், தலைவர் திருவருட் பேரவை புதுக்கோட்டை திரு.இராசம்பத்குமார், சாகித்ய அகாடமி தேர்வுக்குழு உறுப்பினர் திரு.தங்கமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்ட திட்ட மேலாளர்(பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் )திருமதி.மரு.கே.பொன்மலர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார், ஒருங்கிணைப்பாளர் (மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம்) திரு.ஜெ.நூர்முகமது அவர்கள் நன்றி கூறினார்..

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.